முருகப்பெருமான் துணை

**மகான் பரமானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அண்ணலே ஞான தேசிகா
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
2. ஆசிதனை சோபகிருது சேல் திங்கள்
அச்சமற சதுர்திகதி கதிர் வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 04 ம் நாள், 17.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
ஆசிதனை பரமானந்தர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
3. நலம்தரும் சன்மார்க்க நெறியை
ஞானிகள் பூசை வழிமுறையாக
பலம் பெற மக்களிடை பரப்பி
பாருலகில் ஞான வழிகாட்டி வர
4. வருகவே கலியுக மக்கள் தானும்
வரவேற்று வழி மொழிந்து ஞானம்
முருகா என ஏற்றுத் தொடர
முழுமைதரும் ஞான தீட்சை ஏற்க
5. ஏற்கவே குருவருள் துணை கூடி
இனிதே ஞானிகள் ஆசிபலமும்
அற்புதம்பட சூட்சும ஸ்பரிசமும்
அருள் நிலையும் அனுகி நிற்கும்
6. நிற்கவே ஞான நிலை மேம்பட
நிலைத்தன்மை கண்டு சிறக்க
ஏற்புகொண்டு பிரணவக் குடிலாம்
ஏழாம்படை வீட்டில் சங்கமமாக
7. ஆகவே அன்பர்கள் அனைவரும்
ஆறுமுகனார் காட்சி வெளிப்பட
வகைபட பல சூட்சுமம் விளங்கி
வரம்பல கண்டு சிறப்பர்

8. சிறப்பறிவு கூடி அரங்கன் ஆசியால்
சித்திமிகு ஞான யுகம் மாற்றும்
அறத்தின் பலம் அறிந்து உணர்ந்து
அன்னதான சேவை ஆற்றியே

9. ஆற்றியே தருமபலம் தன்னை
அகிலம் முழுமைபட அடைய
ஆற்றலாக கிளைகள் துவக்கி
அருஞ்சேவை புரிந்து வர

10. வருகின்ற சீடர்கள் எல்லாம்
வரம் பெற்ற மகான்களாக
தரும சீலர்களாகச் சிறந்து
தவசி அரங்கன் விரும்புகின்ற

11. விரும்புகின்ற ஞான ஆட்சிதனை
விரைந்து படைக்கும் சக்திகளாக
நிரம்பியே மாற்றம் நிகழ்த்துவர்
நிகழ்த்திவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—